முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.80/2025**

*(CNR.No.TNSV01004070/2025)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர். |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2015 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | ரஞ்சித் (46/2025)<br>த/பெ.பன்னீர்செல்வம்,<br>மருத்துவர் தெரு,<br>பூவனூர்,<br>நீடாமங்கலம் தாலுகா,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் | தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர், திருப்பத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.161/2015 |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், எதிரி மீது இதச பிரிவு 279-ன் கீழான குற்றத்திற்கு ஒரு மாத காலம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் அத்துடன் அபராதம் ரூ.1,000/- விதித்தும் அபராதத்தை செலுத்த தவறினால் இரண்டு வார காலம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 304-A-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருட காலம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் அத்துடன் அபராதம் ரூ.5,000/- விதித்தும் அபராதத்தை செலுத்த தவறினால் மேலும் மூன்று மாத காலம் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழும், எதிரி மேற்கண்ட சிறை தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும், தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:16:05 +0530

10.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | |
|---|---|
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | ***இறுதியாக,*** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.102/2015-ல் கடந்த 07.11.2025-ம் தேதியன்று மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கப்பட்ட தண்டனையை கீழ்க்கண்டபடி மாற்றி அமைத்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>விசாரணை நீதிமன்றத்தால் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு இ.த.ச பிரிவு 304-*A*-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்ததை ஆறு மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனையாக மாற்றி அமைத்தும், இதச பிரிவு 279-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை உறுதி செய்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி மேற்கண்ட சிறை தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும், மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு இதச பிரிவுகள் 279, 304-*A*-ன் கீழ் விதிக்கப்பட்ட மொத்த அபராத தொகைகள் ரூ.6,000/-ஐ உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>விசாரணை நீதிமன்றமான முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் இம்மேல்முறையீட்டாளர்/ எதிரியை கையகப்படுத்தி தீர்ப்பின்படியான மீதமுள்ள சிறைதண்டனை காலத்தை அனுபவிக்க அவரை சிறைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 17.11.2025 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 20.11.2025 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 10.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 02.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.குணசேகரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில்

அரசு வழக்கறிஞர் திரு.A.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீ ர் ப் பு ரை-**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் திருப்பத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 102/2015-ல் உள்ள எதிரி மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2) எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் கடந்த 06.04.2015-ம் தேதி 14.15 மணிக்கு திருப்பத்தூர்-மதுரை ரோட்டில் இரணசிங்கபுரம் கிருஷ்ணா டவுன் ஷிப் அருகில் TN 59 AP 6608 Honda shine என்ற வாகனத்தை செந்தில்குமரன் என்பவர் மேற்கில் இருந்து கிழக்கு முகமாக ஓட்டி வரும்போது எதிரே எதிரி TN 50 U 7596 பொலிரோ வாகனத்தை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் கிழக்கில் இருந்து மேற்கு முகமாக ஓட்டிவந்து செந்தில்குமரன் மீது மோதியதால் செந்தில்குமரனுக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்தக்காயமாகியும், இடது தோள்பட்டை சிதைந்தும், வலது முன்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டும் அதிக ரத்தம் வெளியாகி சம்பவ இடத்திலேயே செந்தில்குமரனுக்கு இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது இதச பிரிவு *279*, 304(A)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திருப்பத்தூர் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:16:30 +0530

**3)** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4)** விசாரணை நீதிமன்றம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 279-ன் கீழான குற்றத்திற்கு ஒரு மாத காலம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் அத்துடன் அபராதம் ரூ.1,000/- விதித்தும் அபராதத்தை செலுத்த தவறினால் இரண்டு வார காலம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 304-A-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருட காலம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் அத்துடன் அபராதம் ரூ.5,000/- விதித்தும் அபராதத்தை செலுத்த தவறினால் மேலும் மூன்று மாத காலம் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழ் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5) மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

*i)* இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சிகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தால் 10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

*ii)* அரசு தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் கண்டுள்ள படி L.W.1 சேதுபதி வழக்கின் சம்பவத்தை கேள்விபட்டு புகார் கொடுத்த சாட்சியாகவும், L.W.2, L.W.3, L.W.4 மங்கையர்கரசி

சம்பவத்தை பார்த்த சாட்சிகளாகவும் L.W.5, L.W.6 ஆகியோர் கேள்விபட்ட சாட்சிகளாகவும், L.W.7 புகார் வாக்குமூல சாட்சியாகவும், L.W.8, L.W.9 ஆகியோர் பார்வை மகஜர் மாதிரி வரைபட சாட்சியாகவும் L.W.10 மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகவும், L.W.11 பிரேத பரிசோதனை மருத்துவ சாட்சியாகவும், L.W.12 பிரேத பரிசோதனை சாட்சியாகவும் L.W.13 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சியாகவும் மற்றும் L.W.14 ஆகியோர் புலன் விசாரணை அதிகாரி சாட்சிகளாக வழக்கில் கண்டு உள்ளார்கள்.

*iii)* ஆனால் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.10 வரையான சாட்சிகளும் Ex.P1 முதல் Ex.P8 வரையான சான்று ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தை பொறுத்து அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் உரிய சாட்சிகள் சான்றாவணங்கள் மூலம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதா என்று பார்த்தால் அ.சா.1 சேதுபதி விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் புகார் கொடுத்த நபராகவும் அவர் தனது நீதிமன்ற சாட்சிய முதல் விசாரணையில் தனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும் அங்கு கூறியதன் அடிப்படையில் புகார் கொடுத்ததாகவும் அதில் அ.சா.2 கணேசன் உதவியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

*iv)* இந்நிலையில் மேலும் வழக்கில் சம்பவ சாட்சியாக கிருஷ்ணன் என்பவரும் குமார் என்பவரும் அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆக விசாரணை நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு உள்ளார்கள் அவர்களில் அ.சா.3 தன்னுடைய முதல் விசாரணையில் கார் ரோட்டில் ஏறி வந்ததால் விபத்து நடந்தது என்றும், ஆனால்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:16:47 +0530

அ.சா.4 தன்னுடைய முதல் விசாரணையில் இரண்டு வாகனங்களும் வேகமாக வந்தது எந்த வாகனத்தின் மீது தவறு என தெரியவில்லை என்று முன்னுக்கு பின் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த வழக்கில் சம்பவ சாட்சியாக குற்றப் பத்திரிக்கையில் கண்டுள்ள L.W.2 அப்துல் காதர் என்பவரை விசாரண செய்து இருந்தால் உண்மை தெளிவாக தெரியக்கூடிய சூழ்நிலை உள்ள நிலையில் அவரையும் அரசு தரப்பில் விசாரிக்க நடவடிக்கை எடுக்காத நிலை உள்ள விபரத்தை விசாரணை நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துரைத்து உள்ளதை கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றமும் சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*v)* மேலும் வழக்கின் மிக முக்கியமாக புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் தான் சம்பவ இடத்திற்கு போகும்போது விபத்திற்கு உட்பட்ட இரண்டு வாகனங்களும் சம்பவ இடத்தில் இல்லை எனவும் சாட்சியமளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரி எதன் அடிப்படையில் எந்த இடத்தில் விபத்து நடந்தது எனவும் தெளிவில்லாத நிலையில் சாட்சியமளித்துள்ளதை கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றமும் சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*vi)* பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபட சாட்சிகளை பொறுத்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ள நிலையை கண்டறிந்து விசாரணை நீதிமன்றமும் சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை

விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*vii)* விசாரணை நீதிமன்றமும் வழக்கின் மிக முக்கியமாக சாட்சிய சான்றாவணங்களை வழக்கு நிலையோடு சேர்ந்து அணுகாமல் அனுமானத்தின் அடிப்படையில் வழங்கிய மிக குறுகிய தீர்ப்பும் ஏற்றுக்கொள்ளகூடிய ஒன்றாக இல்லை. மேலும் சாட்சிய சட்டங்களின் படி சந்தேகத்தின் பலன்களை குற்றம் சாட்டப்பட்டவருக்கே வழங்க வேண்டுமே தவிர குற்றம் சுமத்துபவருக்கு இல்லை என்பது குறித்து மாண்புமிகு நீதிமன்றங்கள் பல்வேறு முன் தீர்ப்பு வாயிலாக உணர்த்தி உள்ள நிலையிலும் மேலும் Rash and Neglicence வழக்குகளை பொறுத்து சம்பவ சாட்சிகள் மிக முக்கியம் மற்றும் அவசியம் என்பதை பல்வேறு முன் தீர்ப்புகள் மூலம் நிருபித்து உள்ள நிலையையும் கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றமும் சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*viii)* மேலும் அரசு தரப்பு வழக்கும் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது குறித்து எவ்வித சாட்சியமும் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பால் நிரூபிக்காத நிலையிலும் மேலும் சம்பவ இடம் மற்றும் சாட்சிகளின் உண்மை நிலை மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டும் இந்த கிரிமினல் வழக்கின் முடிவு *claim* என்ற சிவில் வழக்கை பாதிக்காது என்ற நிலையில் உண்மையில் தாவா விபத்து யாரால் ஏற்பட்டது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது அவர்களை விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்காத நிலையை விசாரணை நீதிமன்றமும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:17:01 +0530

கண்டறிந்து சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*ix)* எது எப்படி இருப்பினும் எதிரியின் நன்னடத்தை குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றமும் சந்தேகத்தின் பலன்களை மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

எனவே, மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை அனுமதித்தும், திருப்பத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடந்த 07.11.2025-ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2015-ல் வழங்கிய தீர்ப்பை ரத்து செய்தும், மேற்படி மேல்முறையீட்டாளர்/எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்தும், மேற்படி வழக்கில் மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் செலுத்திய அபராத தொகையை திரும்ப கிடைக்கவும் உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6) இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்:-**

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 279, 304(A)-ன் படியான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாக கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான திருப்பத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2015-ல் கடந்த 07.11.2025-ம் தேதியன்று இவ்வழக்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:17:32 +0530

எதிரியான மேல்முறையீட்டாளருக்கு எதிராக பிறப்பித்த தண்டனை தீர்ப்பும், தீர்ப்பு தண்டனையும் ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**பிரச்சனைகள் : 1 முதல் 3:-**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கைப் பொறுத்தவரையில் இவ்வழக்கில் கடந்த 06.04.2015-ம் தேதி 14.15 மணிக்கு திருப்பத்தூர்-மதுரை ரோட்டில் இரணசிங்கபுரம் கிருஷ்ணா டவுன் ஷிப் அருகில் TN 59 AP 6608 Honda shine என்ற வாகனத்தை செந்தில்குமரன் என்பவர் மேற்கில் இருந்து கிழக்கு முகமாக ஓட்டி வரும்போது எதிரே எதிரி TN 50 U 7596 பொலிரோ வாகனத்தை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் கிழக்கில் இருந்து மேற்கு முகமாக ஓட்டிவந்து செந்தில்குமரன் மீது மோதியதால் செந்தில்குமரனுக்கு தலையில் பின்புறம் பலத்த இரத்தக்காயமாகியும், இடது தோள்பட்டை சிதைந்தும், வலது முன்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டும் அதிக ரத்தம் வெளியாகி சம்பவ இடத்திலேயே செந்தில்குமரனுக்கு இறப்பை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304-A-ன் கீழ் குற்றச்சாட்டு முறையிடப்பட்டுள்ளது.

**8)** இவ்வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம் அதாவது அறிவார்ந்த முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் வழக்கில் உள்ள சாட்சியங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து இந்த எதிரிக்கு இதச பிரிவு 279-ன் கீழான குற்றத்திற்கு ஒரு மாத காலம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் அத்துடன் அபராதம் ரூ.1,000/- விதித்தும்

அபராதத்தை செலுத்த தவறினால் இரண்டு வார காலம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 304-A-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருட காலம் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் அபராத தொகை ரூ.5,000/- விதித்தும், அபராத தொகை செலுத்த தவறினால் மேலும் மூன்று மாத காலம் சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழும், எதிரி மேற்கண்ட சிறை தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பின் பேரில் இந்த மேல்முறையீட்டு வழக்கை எதிரி தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அ.சா.1 சேதுபதி இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விப்பட்டு விபரம் தெரிந்து புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி. அ.சா.3 மற்றும் அ.சா.4 சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.2, அ.சா.5 மற்றும் அ.சா.7 இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விப்பட்டு வந்து விபரத்தை கூறும் சாட்சிகள். அ.சா.6 பார்வை மகஜரில் கையெழுத்து போட்டது பற்றி கூறும் சாட்சி. அ.சா.8 *RM*.காளிராஜன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கியது பற்றி கூறும் சாட்சி. அ.சா.9 அழகுசுந்தரம் பிரேத பரிசோதனை அலுவலுக்கு ஆஜரானது பற்றி கூறும் சாட்சி. அ.சா.10 ராஜசேகர் விசாரணை எதிரியை கைது செய்தது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது மற்றும் வழக்கு சம்மந்தமாக கூறும் சாட்சி ஆவார்கள். இவ்வழக்கில் இறந்து போன செந்தில்குமரன் தந்தை அ.சா.1 சேதுபதி புகார்தாரர் தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 06.04.2015-ம் தேதி மதுரையில் இருந்து திருப்பத்தூருக்கு ரேசன் அட்டை வாங்குவதற்காக அவருடைய

இருசக்கர வாகனம் TN 59 AB 6608-ல் ஹோண்டா சைன்னில் வந்து கொண்டிருந்தபோது சுமார் 2.30 மணிக்கு எதிரே வந்த பொலிரோ கார் தன் மகனின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், தான் திருப்பத்தூரிலிருந்த போது போலீசார் தனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றும், தான் உடனே தன் மகனை கொண்டு சென்ற திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும், தன் மகனுக்கு தலையின் பின்புறமும், தோள்பட்டை, முன்னங்கால் ஆகிய இடங்களில் காயம்பட்டிருந்தது என்றும், தான் வந்து பார்க்கும்போதே இறந்துவிட்டார் என்றும், நடந்த விபரத்தை விசாரித்து திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும், புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், தன்னோடு இருந்த நண்பர் கணேசன் என்பவரும் அறிவேன் சாட்சியாக தன்னுடன் சேர்ந்து கையொப்பம் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10) அ.சா.2 கணேசன் தனது சாட்சியத்தில் அ.சா.1 சேதுபதி தன்னுடைய பக்கத்து ஊர்க்காரர் என்றும், தனக்கு தெரிந்தவர் என்றும், கடந்த 06.04.2015-ம் தேதி மதியம் சுமார் 3.00 மணிக்கு அ.சா.1 தனக்கு போன் செய்து அவருடைய மகன் செந்தில்குமரன் இரணசிங்கபுரம் அருகே விபத்து ஏற்பட்டதாக சொல்லி தன்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வரச்சொன்னார் என்றும், தான் தனது நண்பர் என்ற முறையில் உடனடியாக புறப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அதன்பிறகு அ.சா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்று அ.சா.1 புகார் கொடுப்பதற்கு தான் உதவியாக இருந்தேன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:18:01 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

என்றும், புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக தான் கையொப்பம் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அ.சா.3 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் தான் இரணசிங்கபுரம் கிராமத்தில் குடியிருக்கிறேன் என்றும், வயதாகிவிட்டதால் வேலைக்கு செல்லவில்லை என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், 2015-ம் வருடம் ஒருநாள் கிருஷ்ணா டவுன்சிப் முன்பு இரணசிங்கபுரம் விலக்கில் உள்ள ரைஸ்மில் அருகில் தான் நின்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது மாலை 2.45 முதல் 4.00 மணிக்குள் இருக்கும் என்றும், மேற்கிலிருந்து கிழக்காக இருசக்கர வண்டியில் வந்த ஹெல்மெட் அணிந்திருந்த நபரின் வண்டியின் மீது அதற்கு எதிராக கிழக்கிலிருந்து மேற்காக வந்த பொலிரோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், பொலிரோ கார் ரோட்டின் வலது பக்கம் ஏறி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்ட வாகனங்களின் பதிவெண்களை அப்போது குறித்து வைத்திருந்தேன் என்றும், தற்போது ஞாபகமில்லை என்றும், இருசக்கர வண்டியில் வந்த நபர் சம்பவயிடத்திலே இறந்துவிட்டார் என்றும், உடலில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்பதை தான் கவனிக்கவில்லை என்றும், தனக்கு அருகில் இருந்தவர் காவல்துறைக்கு தகவல் சொல்லி அவர்கள் அங்கு வந்தார்கள் என்றும், தன்னோடு குமார் என்பவரும் சம்பவத்தை பார்த்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேலும் சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சி அ.சா.4 குமார் தனது சாட்சியத்தில் தான் பதினெட்டாங்குடி கிராமத்தில் வசித்து வந்து திருப்பத்தூரில் குடியிருக்கிறேன் என்றும், தான் மருதப்பா ரைஸ்மில்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:18:14 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், சுமார் 9 வருடத்திற்கு முன்னால் மதியம் சுமார் 2.30 முதல் 2.45 மணியளவில் இருசக்கர வண்டியில் சென்ற இறந்த நபர் மதுரையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்றுகொண்டிருந்த போது திருப்பத்தூரிலிருந்து வந்த வெள்ளை நிறக்கார் இருசக்கர வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டதில் தான் மருதப்பா மில் அருகில் நின்று பார்த்தேன் என்றும், இரண்டு வாகனமும் வேகமாக தான் வந்தது எந்த வாகனத்தின் மீது தவறு என்பது தெரியவில்லை என்றும், விபத்து ஏற்பட்டவுடன் இருசக்கர வண்டியில் வந்த நபர் துடிதுடித்து சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், தலையிலும் வாயிலும் ரத்தம் வந்தது என்றும், அவர் அணிந்திருந்த ஹெல்மட்டை தான் உள்பட அங்கிருந்தவர்கள் கழற்றி விட்டோம் என்றும், ஹெல்மட்டை கழற்றியவுடன் உயிரிழந்து விட்டார் என்றும், பின்னர் போலீசார் வந்து உடலை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிகளைத் தவிர இதர சாட்சிகள் யாரும் சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் கிடையாது.

**13)** அ.சா.5 வீரய்யா தனது சாட்சியத்தில் தான் கொடுக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் மேலூர் மருத்துவமனையில் பாதுகாவலராக இருக்கிறேன் என்றும், விபத்தில் காயம்பட்டு இறந்துபோன செந்தில்குமரன் தன்னுடைய மருமகன் என்றும், தன்னை பார்த்துவிட்டு 06.04.2015-ம் தேதி மதியம் 2.00 மணிக்கு மேலூரில் இருந்து திருப்பத்தூருக்கு செல்வதாக சொல்லிவிட்டு செந்தில்குமரன் கிளம்பி சென்றார் என்றும், தனக்கு 3.15 மணிக்கு திருப்பத்தூரிலிருந்து காவலர் தொடர்பு கொண்டு அரசு

மருத்துவமனைக்கு விபத்து ஏற்பட்ட தகவலை சொல்லி வரச்சொன்னார்கள் என்றும், மருத்துவமனைக்கு புறப்பட்டு வரும்போது சம்பவயிடத்தில் பொலிரோ மற்றும் இருசக்கர வாகனத்தை பார்த்துவிட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும், மருத்துவமனையில் மருமகன் உயிருடன் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேலும் பார்வை மகஜர் சாட்சி அ.சா.6 கண்ணன் தனது சாட்சியத்தில் தான் திருவுடையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றும், விவசாய தொழில் செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது என்றும், 06.04.2015-ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு மேல் திருப்பத்தூர் நகர் காவல்நிலைய ஆய்வாளர் மருதப்பா ரைஸ்மில்லுக்கு எதிரே விபத்து நடந்த இடத்தை பார்த்துவிட்டு விசாரணை செய்தபோது தன்னிடம் கையொப்பம் பெற்றார் என்றும், தானும், தன்னுடைய கூட்டாளி குணசேகரனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், குணசேகரன் தற்போது உயிருடன் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** அ.சா.7 விஜிபாலா தனது சாட்சியத்தில் தான் தற்போது மதுரையில் குடியிருக்கிறேன் என்றும், தான் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் பணிபுரிகிறேன் என்றும், விபத்தில் காயம்பட்டு இறந்துபோன செந்தில்குமரன் தன்னுடைய கணவர் என்றும், 06.04.2015-ம் தேதி தான் மதுரையில் இருந்தபோது திருப்பத்தூருக்கு குடும்ப அட்டை வாங்குவதற்காக தாலுகா அலுவலகத்திற்கு ஹோண்டா சைன் வண்டியில் வந்துகொண்டிருந்தபோது இரணசிங்கபுரம் கிருஷ்ண டவுன்சிப் அருகே விபத்து ஏற்பட்டதாக சுமார் 2.30 மணிக்கு போனில் தகவல் சொன்னார்கள் என்றும்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:18:29 +0530

உடனே தான் புறப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்தேன் என்றும், தன் கணவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள் என்றும், மதுரையிலிருந்து திருப்பத்தூருக்கு சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த பொலிரோ வாகனம் தன் கணவர் சென்ற வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** மேலும் இறந்து போன செந்தில்குமரன் பிரேதத்தை பரிசோதனை செய்து சான்று வழங்கிய அ.சா.8 மருத்துவர் அவரது சாட்சியத்தில் கடந்த 06.04.2015-ம் தேதி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது மாலை 05.15 மணியளவில் திருப்பத்தூர் நகர் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தை முதல் நிலை காவலர் அழகுசுந்தரம் அவர்கள் கொடுத்ததை பார்வையிட்டு ஆய்வாளரின் வேண்டுகோளுக்கு இணங்க குற்ற எண்.161/2015 பிரிவு 279, 304-*A* இ.த.ச வழக்கில் இறந்துபோன செந்தில்குமரன் வயது 35 என்பவருடைய பிரேதத்தினை இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை மேற்கொண்டேன் என்றும், அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது என்றும், 1) இடது பக்க கழுத்திலும் தோள்பட்டைக்கும் இடையில் ஆழமான சிதைந்த காயம் காணப்பட்டது என்றும், அந்த காயத்தினால் எலும்புகள், ரத்த குழாய்கள் நரம்புகள், தசைகள் ஆகியவை வெளியே தெரியும்படி இருந்து அதிக ரத்தப்போக்குடன் இருந்தது என்றும், 2) இடது பக்க முகத்தில் இடது கண் மற்றும் பிடரியில் சிதைந்த காயங்கள் காணப்பட்டது என்றும், 3) வலது முன் கை, வலது தொடை, வலது மூட்டு, வலது கால் மற்றும் இடது மூட்டிலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது என்றும், 4) வலது மூட்டில் பெட்லா

என்ற எலும்பு வலது காலில் இரண்டு எலும்புகளும் முறிந்து காணப்பட்டது என்றும், பிரேத பரிசோதனை முடித்து அதிக ரத்தப்போக்கினால் இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** அ.சா.9 அழகுசுந்தரம் தனது சாட்சியத்தில் கடந்த 06.04.2015-ம் தேதி தான் திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணியிலிருந்தபோது குற்ற எண்.161/2015 இ.த.ச பிரிவுகள் 279, 304-*A* வழக்கில் இறந்துபோன செந்தில்குமரன் என்பவருடைய பிரேதத்தினை உடற் கூறாய்வு செய்வதற்கு பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை 17.00 மணிக்கு முடிந்தவுடன் இறந்தவரின் உறவினர்களிடம் உடலை ஒப்படைத்து விசாரணைக்கு உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** மேலும் இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அ.சா.4 குமார் தனது சாட்சியத்தில் தான் பதினெட்டாங்குடி கிராமத்தில் வசித்து வந்து திருப்பத்தூரில் குடியிருக்கிறேன் என்றும், தான் மருதப்பா ரைஸ்மில்லை குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், சுமார் 9 வருடத்திற்கு முன்னால் மதியம் சுமார் 2.30 முதல் 2.45 மணியளவில் இருசக்கர வண்டியில் சென்ற இறந்த நபர் மதுரையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்றுகொண்டிருந்த போது திருப்பத்தூரிலிருந்து வந்த வெள்ளை நிறக்கார் இருசக்கர வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டதில் தான் மருதப்பா மில் அருகில் நின்று பார்த்தேன் என்றும், இரண்டு வாகனமும் வேகமாக தான் வந்தது எந்த வாகனத்தின் மீது தவறு என்பது தெரியவில்லை என்றும், விபத்து

ஏற்பட்டவுடன் இருசக்கர வண்டியில் வந்த நபர் துடிதுடித்து சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளதில் விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களும் வேகமாக வந்ததாக சாட்சியமளித்துள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**19)** மேலும் அ.சா.3 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 2015-ம் வருடம் ஒருநாள் கிருஷ்ணா டவுன்சிப் முன்பு இரணசிங்கபுரம் விலக்கில் உள்ள ரைஸ்மில் அருகில் தான் நின்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது மாலை 2.45 முதல் 4.00 மணிக்குள் இருக்கும் என்றும், மேற்கிலிருந்து கிழக்காக இருசக்கர வண்டியில் வந்த ஹெல்மெட் அணிந்திருந்த நபர் ஓட்டிய வண்டியின் மீது அதற்கு எதிராக கிழக்கிலிருந்து மேற்காக வந்த பொலிரோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், பொலிரோ கார் ரோட்டின் வலது பக்கம் ஏறி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளதை கவனத்தில் கொள்ளும் போது மேல்முறையீட்டாளர்/எதிரி ஓட்டி வந்த பொலிரோ கார் விபத்திற்கு காரணம் என்பதை இந்நீதிமன்றம் அறிந்து கொள்ள முடிகிறது.

**20)** எனவே மேற்கண்ட வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மேல்முறையீட்டாளர்/எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304-*A*-ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என முடிவு செய்து, மேற்படி விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/எதிரி குற்றவாளி என தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் தவறு ஏதும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருத இயலவில்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:18:56 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**21)** எனினும், வழக்குச் சம்பவம் 2015-ல் நடந்திருப்பதாலும், இம்மேல்முறையீட்டாளர்/எதிரியின் வயது மற்றும் குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், விசாரணை நீதிமன்றம் கடந்த 07.11.2025-ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2015-ல் இம்மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கியுள்ள தண்டனை தீர்ப்பினை மட்டும் மாற்றியமைப்பதே வழக்கு பொருண்மைகளின்படி சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி, அவ்வாறே இந்த பிரச்சனைகளுக்கு விடை காணப்படுகிறது.

***இறுதியாக,*** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.102/2015-ல் கடந்த 07.11.2025-ம் தேதியன்று மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கப்பட்ட தண்டனையை கீழ்க்கண்டபடி மாற்றி அமைத்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

விசாரணை நீதிமன்றத்தால் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு இ.த.ச பிரிவு 304-A-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்ததை ஆறு மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனையாக மாற்றி அமைத்தும், இதச பிரிவு 279-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை உறுதி செய்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி மேற்கண்ட சிறை தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும், மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு இதச பிரிவுகள் 279, 304-A-ன் கீழ் விதிக்கப்பட்ட மொத்த அபராத தொகைகள் ரூ.6,000/-ஐ உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

விசாரணை நீதிமன்றமான முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் இம்மேல்முறையீட்டாளர்/

எதிரியை கையகப்படுத்தி தீர்ப்பின்படியான மீதமுள்ள சிறைதண்டனை காலத்தை அனுபவிக்க அவரை சிறைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:19:19 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர்.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு
எண்.80/2025
தீர்ப்புரை நாள்: 10.04.2026